# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No. 132/2025

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு.பாஸ்கர் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பாஸ்கர் | வயது | : | 57/26 |
| த.பெ. | : | சுப்பிரமணியன் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | கீழசிந்தாமணி | நிலை | : | LW02 / PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் கீழசிந்தாமணியில் வசித்து, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் என் உறவினர்கள், பக்கத்து வீட்டில் வசிக்கிறார்கள். அ.சா.1 என் மருமகள். பொழியில் இருந்த மரத்தை வெட்டச் சொன்னது தொடர்பாக எங்களுக்கும் அவர்களுக்கும் பிரச்சனை இருந்து வந்தது. சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள், தேதி மாதம் நினைவில்லை, இரவு சுமார் 09.00 மணியளவில், நான் என் வீட்டிலிருந்தபோது, எதிரி ஆனந்த் கையில் கழியுடன் வந்து, மேலே கீழே என்னை பேசும் சத்தம் கேட்டது. அப்போது நான் வெளியே வந்து பார்த்தேன். என் மனைவியும் என் பின்னால்

வந்தார். எதிரி குமார் என் மனைவியை மூங்கில் கழியால் நெற்றியில் அடித்தார். எதிரி ஆனந்த் என் மனைவியை பின் தலையிலும், இடது கையிலும் அடித்தார். அதில் என் மனைவிக்கு நெற்றியிலும் பின் தலையிலும் இரத்தக் காயம் ஏற்பட்டது. அதை தடுக்க வந்த என் மருமகள் அ.சா.1 ஐ எதிரி ஆனந்த் மூங்கில் கழியால் நெற்றி புருவத்தில் அடித்தார். நாங்கள் தா.பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றோம். பின் அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு என் மனைவிக்கு தலையில் 6 தையல்கள் போட்டார்கள். எனது மருமகளுக்கு நெற்றி புருவத்தில் தையல் போட்டார்கள். எதிரி தாக்கிய மூங்கில் கழியிலிருந்த கணு அவரது நெற்றியின் உள்ளே சென்றதால் அதை எடுக்க வேண்டும் என்பதற்காக அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பின்னர், தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று நான் புகார் எழுதி காவல் நிலையத்தில் கொடுக்வில்லை என்றால் சரிதான். நான் சம்பவமானது வீட்டிற்கு வெளியில் நடந்தது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று நான் காவல் நிலையம் செல்லவில்லை, நேராக மருத்துவமனைக்குத்தான் சென்றேன். யார் யார் சென்றோம்

என்றால் என் மனைவி, மருமகள், மகன் குமரகுரு, நான் சென்றோம். எனது மகனும் மருமகளும் காவல் நிலையம் செல்லாமல் நேரடியாக எங்களுடன் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். முதலில் பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றோம். அவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்களை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வீட்டிலிருந்து பழூர் மருத்துவமனைக்கு நாங்கள் நான்குபேரும் நடந்துதான் சென்றோம் என்றால் சரிதான்.

3) எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் மரம் வெட்டுவது சம்மந்தமாமக முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி முன்விரோதம் காரணமாக எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி, எதிரிகள் மீது என் மருமகள் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு, என் மனைவிக்கோ, என் மருமகளுக்கோ எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றாலும், அவ்வாறு காயம் ஏற்பட்டிருந்தால் நாங்கள் நடந்து மருத்துவமனைக்கு சென்றிருக்க முடியாது என்றால் சரியல்ல.

5) நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளால் என் மருமகளுக்கோ, என் மனைவிக்கோ எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் பொய் வழக்கு எதிரிகள் மீது கொடுத்துள்ளதால்தான் நான், என் மருமகள், ஆகியோர் முன்னுக்கு பின் முரணமாக சாட்சியம் அளித்துள்ளோம் என்றாலும் உண்மையில் சம்பவம்

நடந்திருந்தால் சம்பவம் நடந்தமாதிரிதான் புகார் கொடுத்து, சாட்சியம் அளித்திருப்போம் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.